இரண்டாவது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், நாகர்கோவில்.

O.S. 98/2015

Date :12.02.2026

வா.சா. 1 – செந்தில்மணி

Solemnly affirmed in accordance with the Provision of Act X of 1873.

**1,2 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி**.

வழக்கு ஏ பட்டிகை சொத்து பட்டா யார் பெயரில் உள்ளது என்றால் தற்போது தங்கச் சித்ரா பெயரில் உள்ளது. வழக்கு பி பட்டிகை சொத்து பட்டா யார் பெயரில் உள்ளது என்றால் தற்போது தங்கச் சித்ரா பெயரில் உள்ளது. மேற்படி பட்டா எண் என்ன என்றால் 533/11. பட்டா எண் தெரியாது. மேற்படி வழக்கு பட்டிகை சொத்திற்கான கரத்தீர்வை யார் பெயரில் உள்ளது என்றால் ஞாபகம் இல்லை. வழக்கு பட்டிகை சொத்திற்கு மின் இணைப்பு உண்டா என்றால் உண்டு. மின் இணைப்பு எண் என்ன என்றால் H1 – 102. மேற்படி மின் இனைப்பு யார் பெயரில் உள்ளது என்றால் எனது தந்தை தங்கமணி பெயரில் உள்ளது. என்னிடம் காட்டப்படும் மின் இணைப்பு ரசீது H1 – 102 மேற்படி சொத்திற்கானதா என்றால் ஆம். **மேற்படி மின்இணைப்பு ரசீது பி,வா.சா.ஆ 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** மேற்படி பிவாசாஆ 1 தங்கச்சித்ரா பெயரில் உள்ளது என்றால் சரிதான்.

வழக்கு பட்டிகைச் சொத்தின் உள்ள வீட்டில் வீட்டு ரசீதும் தங்கச் சித்ராபெயரில் தான் உள்ளது என்றால் ஞாபகம் இல்லை. வழக்கு பட்டிகை சொத்து எனது பெயரில்இருப்பதற்கான கரத்தீர்வை ரசீதோ மின்இணைப்பு ரசீதோ மற்றும் வீட்டு வரி ரசீதோ நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. அசல் உரிமை ஆவணம் தாக்கல் செய்துள்ளேன். வழக்குப் பட்டிகைச் சொத்து 3ம் பிரதிவாதி தங்கச்சித்ரா பெயரில் உள்ளது என்றால் சரியல்ல. வழக்குரையில் குறிப்பிட்டுள்ள சங்கதிகள் குறித்து விவரங்கள் அனைத்தும் தெரியுமா என்றால் தெரியும். நான் 3ம் பிரதிவாதிக்கு வழக்கு ஏ பட்டிகை சொத்து குறித்துவிடுதலை பத்திரம் எழுதி கொடுத்தேன். அதற்கான காரணம் வழக்குரையில் குறிப்பிடப்பபட்டுள்ளதா என்றால் குறிப்பிட்டுள்ளது.

வழக்கு பட்டிகை சொத்து சம்பந்தமாக பிரச்சனை ஏற்பட்டு அதற்காக நான் புகார் கொடுத்தேனா என்றால் பிரதிவாதிகள் தான் கொடுத்தார்கள். அதன்பின்பு நான் புகார் கொடுத்தேனா என்றால் இல்லை. வழக்கு தான் தாக்கல் செய்தேன். வழக்கு ஏ பட்டிகை சொத்தின் வடக்கு பக்கம் 1 ம் பிரதிவாதியின் சொத்து உள்ளது. அந்த சொத்திற்கு தெற்கு பகுதியில் ரோட்டிலிருந்து கிழக்கு மேற்காக 54 அடி தான் உண்டுஎன்றால் ஞாபகம் இல்லை.

பத்திரத்தில் துலங்கும். மேற்படி 54 அடியைஅளவிட்டு 1 பிரதிவாதி காம்பவுண்டுசுவர் கட்டியுள்ளார் என்றால் சரியல்ல. அதிகமாக கட்டியுள்ளார். கிழக்கு மேற்காக இருக்கும் 54 அடிக்கு எல்கை கற்கள் உள்ளது என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதி அதனை அகற்றிவிட்டார். மேற்படி எல்கை கற்களை அகற்றிவிட்ட விவரங்களை வழக்குரையில் குறிப்பிட்டுள்ளேனா என்றால் ஞாபகம் இல்லை. மேற்படி எல்கை கற்களை அகற்றிவிட்டதால் புகார் எதுவும் கொடுத்தேனா என்றால் புகார் கொடுத்தேன். எந்த தேதியில் புகார் கொடுத்தேன் என்றால் ஞாபகம் இல்லை. மேற்படி புகாரை நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேனா என்றால் தாக்கல் செய்தேன்.

வழக்கு பட்டிகைச் சொத்து 3 ம் பிரதிவாதியின் பூர்விக சொத்து என்றால் சரியல்ல. எனது தந்தையின் பூர்விக சொத்து. மேற்படி பூர்விக சொத்து மொத்தம் 4 செண்ட் என்றால் சரியல்ல. 4.875 செண்ட். மேற்படி பூர்விக சொத்து மொத்தம் 4.875 செண்ட் என்பதற்கான ஆவணம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன்.

<u>குறுக்கு விசாரணைக்காக வழக்கு ஒத்திவைக்கப்படுகிறது</u>.